ADITYA BIRLA CAPITAL

# ADITYA BIRLA FINANCE LIMITED

**Registered Office :** Indian Rayon Compound, Veraval, Gujarat-362 266.
**Corporate Office :** 10th Floor, R Teck Park, Nirlon Complex, Near Hub Mall, Goregaon (East) Mumbai-400 063, MH.

## DEMAND NOTICE

**UNDER SEC 13(2) OF THE SECURITISATION AND RECONSTRUCTION OF FINANCIAL ASSETS AND ENFORCEMENT OF SECURITY INTEREST ACT, 2002 ("THE ACT") READ WITH RULE 3 OF THE SECURITY INTEREST (ENFORCEMENT) RULES, 2002 ("THE RULES")**

The undersigned being the **Authorized officer** of **Aditya Birla Finance Limited (ABFL)** under the Act and in exercise of powers conferred under Section 13(12) of the Act read with the Rule 3, issued Demand Notice(s) under Section 13(2) of the Act, calling upon the following borrower(s) to repay the amount mentioned in the respective notice(s) **within 60 days** from the date of receipt of the said notice. The undersigned reasonably believes that borrower(s) is / are avoiding the service of the demand notice(s), therefore the service of notice is being effected by affixation and publication as per Rules. The contents of demand notice(s) are extracted herein below:

In connection with the above, Notice is hereby given, once again, to the said Borrower's / Legal Heir(s) / Legal Representative(s) to pay to **ABFL, within 60 days** from the date of the respective Notice/s, the amount indicated herein below against their respective names, together with further interest as detailed below from the respective dates mentioned below in column (d) till the date of payment and / or realisation, read with the loan agreement and other documents / writings, if any, executed by the said Borrower's. As security for due repayment of the loan, the following Secured Asset(s) have been mortgaged to **ABFL** by the said Borrower's respectively.

| Sr. No. | Name and Address of the Borrower(s) | Demand Notice Date & NPA Date / Total O/s. Dues Amt. | Description of Immovable property |
|---|---|---|---|
| 1 | 1. **M/s. Mayur Consultancy** (Through Its Legal Hirer), •**Mob. No.** 9500078991 •**Emai ID :-** zephicous@gmail.com 2. **Mr. Suresh Thomas,** S/o. **Tharayil Thomas,** •**Mob. No.** 9500078991 3. **Mrs. Charmine Thomas,** W/o. **Suresh Thomas** & D/o. **Peter Dsouza** •**Mob. No.** 9444027034 **ADD.1:**C3, RC Gem Apartment, 40/72, Siruvallur High Road, Perambur, Chennai, Tamil Nadu-600 011. •**LAN : ABCHNSTS000000520414** | 12th October 2023 & 03rd October 2023 / **Total O/s. Dues Amt.** ₹ **21,08,233/-** as on **11.10.2023** | All That Piece & Parcel of Land & Building, Bearing Plot No. 140 Comprised in S. Nos. 50/10, 20/10, R. S. No. 20-10A Part Now T. S. No. 32 & 2 Part, Block No. 16 **Measuring With An Extent of** 1180/12000 of UDS Out of 5315 Sq. Ft, together With Residential Flat Bearing No. C3 In Third Floor Having A Built Up **Area Measuring** 980 Sq. Ft, Situated At R. C. Jems, Door No. 40, Sirivallur High Road, Siruvallur Village, Perambur Taluk, Chennai District ❖**Bounded on the :-** ✦**North By :** Land Comprised in R. S. No.20/13; ✦**South By :** Sirivalluvar High Road; ✦**East By :** Land Comprised in R. S. Nos. 20/12 & 20/10B; ✦**West By :** Beer Shop Lane. •Situated Within The Sub-Registration District of Sembiam and in The Registration District Of North Chennai. |

With further interest, additional Interest at the rate as more particularly stated in respective Demand Notices dated mentioned above, incidental expenses, costs, charges etc incurred till the date of payment and / or realization. If the said Borrower's shall fail to make payment to **ABFL** as aforesaid, then **ABFL** shall proceed against the above Secured Asset(s) / Immovable Property (ies) under Section 13(4) of the said Act and the applicable Rules entirely at the risk of the said Borrower's / Legal Heir(s) / Legal Representative(s) as to the costs and consequences.

The said Borrower's / Legal Heir(s) / Legal Representative(s) are prohibited under the said Act to transfer the aforesaid Secured Asset(s) / Immovable Property(ies), whether by way of sale, lease or otherwise without the prior written consent of **ABFL**. That please note that this is a final notice under Section 13(2) of the Securitization and Reconstruction of Financial Assets and Enforcement of Security Interest Act, 2002 (54 of 2002). Needless to say, that **ABFL** shall be within its right to exercise any or all of the rights referred to above against the borrower(s) entirely at their risk, responsibility & costs.

**Place** : Chennai, Tamil Nadu.
**Date** : 26.10.2023

Sd/-
Authorised Officer
**ADITYA BIRLA FINANCE LIMITED**

# Jumbo Bag Ltd.

ISO 22000,9001,14001, 45001 & BRCGS

**Regd. Office: "S.K. ENCLAVE" New No.4, (Old No.47), Nowroji Road, Chetpet, Chennai - 600 031.**
**CIN : L36991TN1990PLCO19944; website :www.jumbobaglimited.com;**
**Email: csjbl@blissgroup.com; Ph:044 26452325**

## EXTRACT OF UNAUDITED (STANDLAONE) FINANCIAL RESULTS FOR THE PERIOD ENDED 30th September, 2023

(Rs. In lakhs except EPS)

| Sl. No. | Particulars | 3 Months ended 30.09.2023 | 3 Months ended 30.09.2022 | 6 Months ended 30.09.2022 |
|---|---|---|---|---|
| | | Un Audited | Un Audited | Un Audited |
| 1 | Total income from operations | 2,751.51 | 3,245.30 | 6,359.50 |
| 2 | Net profit/(Loss) for the period (before Tax, Exceptional and/or Extraordinary items) | 61.26 | 51.87 | 127.62 |
| 3 | Net profit/(Loss) for the period before tax (after Exceptional and/ or Extraordinary items#) | 61.26 | 51.87 | 127.62 |
| 4 | Net profit/(Loss) for the period after tax (after Exceptional and/or Extraordinary items#) | 45.28 | 39.63 | 96.30 |
| 5 | Total Comprehensive Income for the period [Comprising Profit / (Loss) for the period (after tax) and Other Comprehensive Income (after tax)] | 45.28 | 39.63 | 96.30 |
| 6 | Equity Share Capital (Face Value of Rs.10 each fully paid up) | 837.37 | 837.37 | 837.37 |
| 7 | Reserves (Excluding Revaluation Reserve as shown in the Balance Sheet of Previous year) | 1,320.29 | 1,175.04 | 1,175.04 |
| 8 | Earnings per share (before Extraordinary items) (Face Value of Rs.10/- each) | | | - |
| | a) Basic: | 0.54 | 0.47 | 1.15 |
| | b) Diluted: | 0.54 | 0.47 | 1.15 |

Note: The above is an extract of the detailed format of Quarterly/Annual Financial Results filed with the Stock Exchanges under Regulation 33 of the SEBI (Listing and Other Disclosure Requirements) Regulations, 2015. The full format of the Quarterly/Annual Financial Results are available on the Stock Exchange websites URL - www.bseindia.com and Company's website http://www.jumbobaglimited.com

**Place: Chennai**
**Date : 25.10.2023**

**For and on behalf of the Board**
**G.S.Anilkumar**
**Managing Director**

## வெம்பாக்கத்தில் மனுநீதி நாள் முகாம் 501 பேருக்கு ரூ. 15 லட்சத்தில் நலத்திட்ட உதவிகள் வழங்கல்!



**திருவண்ணாமலை, அக். 26-**

திருவண்ணாமலை மாவட்டம், வெம்பாக்கம் வட்டம், திருப்பணங்காடு கிராமத்தில் நடைபெற்ற மனு நீதி நாள் முகாமில், பல்வேறு துறைகளின் சார்பில் ரூ.15 லட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை 501 பயனாளிகளுக்கு ஆட்சியர் பா.முருகேஷ் வழங்கினார்.

அப்போது அவர் பேசுகையில், ''அரசு அறிவிக்கும் திட்டங்களை மக்கள் முதலில் தெரிந்து கொள்ள வேண்டும். எடுத்துக்காட்டாக சுகாதாரத்துறையில் மக்களைத் தேடி மருத்துவம் என்ற திட்டம் உள்ளது. இத்திட்டம் இந்த காலகட்டத்திற்கேற்ப அறிந்து இன்று தொடர்ந்து நடைபெற்று கொண்டிருக்கிறது. நமது மாவட்டத்தில் 11 லட்சம் பேருக்கு இத்திட்டத்தின் மூலம் சிகிச்சை அளிக்கப்பட்டு உள்ளது. நம்மைகாக்கும் 48 திட்டம் இத்திட்டத்தின் மூலம் யாருக்காவது விபத்து ஏற்பட்டால் 48 மணி நேரத்ததிற்குள் இலவச சிகிச்சை அரசே வழங்குகிறது. மேலும் மாணவர்களுக்கு காலை சிற்றுண்டி திட்டம் மிகவும் சிறப்பாக செயல்பட்டு வருகிறது,'' என்றார்.

தொடர்ந்து மனுநீதி நாள் முகாம் திட்ட விழாவில் பல்வேறு துறைகளின் சார்பில் ரூ.15 லட்சம் மதிப்பிலான பட்டா மாற்றம், முதியோர் உதவித்தொகை, நத்தம் பட்டா, உட்பிரிவு பட்டா மாற்றம், மாற்றுத்திறனாளிகள் உதவித்தொகை, இலவச தையல் இயந்திரம், விசை தெளிப்பான். மழைதூவான். என பல்வேறு நலத்திட்ட உதவிகளை 501 பயனாளிகளுக்கு ஆட்சியர் வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில் செய்யார் எம்.எல்.ஏ., ஓ.ஜோதி, செய்யார் சார் ஆட்சியர் அனாமிகா, மாவட்ட ஊராட்சி குழு தலைவர் பார்வதி சீனிவாசன், வட்டாட்சியர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## கோட்ட குப்பம் மக்கள் நலக்கூட்டமைப்பினர் ஆர்ப்பாட்டம்



**புதுச்சேரி, அக். 26-**

புதுச்சேரி அடுத்த கோட்டக்குப்பம் பகுதிகளில் 10 ஆண்டுகளுக்கு மேலாக ஏற்படும் தொடர் மின்வெட்டு பிரச்னைக்கு நிரந்தர தீர்வு காண, பொதுமக்கள் அவ்வப்போது போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். கடந்த சில மாதங்களாக ஏற்படும் மின்வெட்டு மற்றும் குறைந்த அழுத்த மின்சாரம் காரணமாக கோட்டக்குப்பம் பகுதிகளில் உள்ள வீடு, வணிக நிறுவனங்களில் மின்சாதன பொருட்கள் அடிக்கடி பழுதாகி பொருளாதார இழப்பையும் ஏற்படுத்தி வருகிறது.

இதனை கண்டித்து கோட்டகுப்பம் மக்கள் நல கூட்டமைப்பின் சார்பில் கோட்டக்குப்பம் பகுதியில் கடைகளை அடைத்து தொடர் முழக்கப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நகராட்சி திடலில் நடைபெற்ற தொடர் முழக்கப் போராட்டத்தில், பத்தாண்டு காலமாக கோட்டகுப்பம் நகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் ஏற்படும் தொடர் மின்வெட்டை உடனடியாக சரி செய்ய வேண்டும், குறைந்த மின் அழுத்தத்தை போக்குவதற்கு துணை மின் நிலையம் அமைக்க வேண்டும் என்பன போன்ற கோரிக்கைகளை வலியுறுத்தி கண்டன கோஷங்களை எழுப்பினார்கள். இந்த போராட்டத்தில் கோட்டகுப்பம் பகுதியைச் சேர்ந்த சுமார் 500-க்கும் மேற்பட்ட அனைத்து கட்சி பிரதிநிதிகள் சமூக ஆர்வலர்கள் பொது மக்கள் மக்கள் நல கூட்டமைப்பு என அனைவரும் திரளாக கலந்து கொண்டனர்.

## நாச்சியார்கோவில் சீனிவாசப் பெருமாள் கோவில் கும்பாபிஷேகம்...

1ம் பக்க தொடர்ச்சி

சுபதினத்தில் காலை 8.00 மணிக்கு மேல் 10.30 மணிக்குள்துலா லக்னத்தில் ஜீர்ணோத்தாரண ரஜதபந்தன அஷ்டபந்தன (மஹா ஸம்ப்ரோக்ஷணம்) திருக்குட முழுக்கு நன்னீராட்டு பெருவிழா நடைபெற உள்ளது. யாகசாலை நிர்வாக ஆலோசகர் சம்பத் பட்டாச்சாரியார், சர்வசாதகம் கோபிநாத பட்டாச்சாரியார், ஆகம பட்டாச்சாரியார் கண்ணன் பட்டாச் சாரியார், சந்நிதி அர்ச்சகர்கள் லெட்சுமிநரசிம்ம பட்டாச்சாரியார், வாசுதேவ பட்டாச்சாரியார் உட்பட ஐம்பது பட்டாச்சாரியார்கள் யாக பூஜை செய்து செய்து வருகின்றனர். 20 பேர் வேதபாராயணம் செய்கின்றனர். 70 பேர் திவ்ய பிரபந்தம் பாராயணம் செய்கின்றனர்.

பக்தகோடிகள் அனைவரும் வருகைதந்து ஸ்ரீ நம்பி நாச்சியார் கல்கருடன் கிருபையும் அருளும் பெற்றுத் திகழ் வேணுமாய் ப்ராத்திக்கிறோம் என்று கோவில் நிர்வாகிகள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

கும்பாபிஷேகத்திற்கு 25 ஆயிரம் பக்தர்களுக்கு மேல் வருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தஞ்சை எஸ்.பி., ஆஷிஸ்ராவத் உத்தரவின் பேரில் திருவிடைமருதுடர் டி.எஸ்.பி., ஜாபர் சித்திக் மேற்பார்வையில் நாச்சியார்கோவில் போலீஸ் இன்ஸ்பெக்டர் ரேகாராணி தலைமையில் 250க்கும் மேற்பட்ட போலீசார் பாதுகாப்புப்பணியில் ஈடுபட்டுள்ள னர். கும்பாபிஷேகத்திற்கான ஏற்பாடுகளை கோவில் தக்கார் கோ.கிருஷ்ணகுமார், செயல் அலுவலர் பா.பிரபாகரன் மற்றும் கோவில் பணியாளர்களும் செய்துள்ளனர்.

## கெருகம்பாக்கத்தில் தி.மு.க., தெருமுனை கூட்டம்



**குன்றத்துார், அக். 26-**

காஞ்சிபுரம் மாவட்டம் ஆலந்துார் தொகுதி குன்றத்துார் வடக்கு ஒன்றியம் கெருகம்பாக்கம் ஊராட்சியில், மறைந்த முன்னாள் முதல்வர் கருணாநிதி நுாற்றாண்டு விழா மற்றும் இரண்டு ஆண்டு சாதனை விளக்க தெருமுனைக் கூட்டம் நடைபெற்றது. அமைச்சர் தா.மோ.அன்பரசன் கட்சி கொடியை ஏற்றிவைத்து, கல்வெட்டை திறந்து வைத்து, பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கினார். சிறப்பு அழைப்பாளராக தலைமைக்கழக சொற்பொழிவாளர் கோ.வி. செழியன், கருணாநிதியின் சாதனைகளையும்திராவிட மாடல் ஆட்சியின் இரண்டாண்டு சாதனகள் குறித்தும் பேசினார். இதில் ஒன்றிய செயலர் படப்பை ஆ.மனோகரன், வந்தே மாதரம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். விழாவில் ஒன்றிய துணைச் செயலர் கே.வசிகரன், ஒன்றிய கவுன்சிலர் கே.சுதாகரன் வரவேற்புரையாற்றினர். இளைஞர் அணி செயலர் செ.இமான், டி.சதீஷ், கே.ஐயப்பன் ஆகியோர் நன்றி கூறினர். இதில் பொதுக்குழு உறுப்பினர் எத்திராஜ், மாவட்ட அணி தி.க.,பாஸ்கரன், இளைஞரணி சு.ஜனார்த்தனன், ஊராட்சி மன்ற தலைவர்கள் அய்யப்பந்தாங்கல் ஜமீலா பாண்டுரங்கன், தண்டலம் அரசு, தரப்பாக்கம் பாண்டியன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



துாத்துக்குடி மாவட்ட நெடுஞ்சாலைத்துறை அலுவலகத்தில், கோட்ட பொறியாளர் ஆறுமுக நயினார் தலைமையில், ஆயுத பூஜை கொண்டாடப்பட்டது. இதில், அலுவலக ஊழியர்கள் கலந்து கொண்டனர்.

## பூலம்பாடி பேரூராட்சியில் பிளஸ் மேக்ஸ் உழவர் உற்பத்தியாளர் தினசரி காய்கறி சந்தை திறப்பு!



**பெரம்பலூர், அக். 26-**

பெரம்பலூர் மாவட்டம், வேப்பந்தட்டை அடுத்துள்ள பூலம்பாடி பேரூராட்சியில், விவசாயிகளின் பாதுகாவலர், தொழிலதிபர் டத்தோ பிரகதீஷ்குமார் முயற்சியால் கொண்டுவரப்பட்ட பிளஸ் மேக்ஸ் உழவர் உற்பத்தியாளர் நிறுவன தினசரி காய்கறி சந்தை திறப்பு விழா நடைபெற்றது.

பிளஸ் மேக்ஸ் நிறுவனத்தை தமிழ்நாடு போக்குவரத்து துறை அமைச்சர் சிவசங்கர் திறந்து வைத்து பொது மக்களின் பயன்பாட்டுக்கு கொண்டு வந்தார். இந்த நிகழ்வில், ஆட்சியர் கற்பகம் மற்றும் எம்.எல்.ஏ., எம்.பிரபாகரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அப்போது டத்தோ பிரகதீஷ் குமார் கூறுகையில், ''இந்த பிளஸ் மேக்ஸ் நிறுவனம் என் சுயலாபத்திற்காக தொடங்கப்பட்டது அல்ல; இவை முற்றிலும் விவசாயிகளின் வாழ்க்கையை மேம்படுத்தவே. நான் அயல் நாடுகளில் பணியாற்றும்போது எனக்கு அடிக்கடி செயல்படும் ஒரே சிந்தனை பூலாம்பாடி விவசாய மக்களின் வாழ்வின் முன்னேற்றத்திற்கு என்ன செய்யலாம் என்ற நோக்கத்துடன் இந்த நிறுவனம் கொண்டு வரப்பட்டுள்ளது.

இந்த நிறுவனத்தின் மூலம் விவசாயிகள் தாங்கள் விளைவிக்கும் பொருட்களை, நல்ல விலை பெற்று வாழ்வில் முன்னேற வேண்டும் என்பதே எனது நோக்கம்,'' என்றார்.

இந்த நிகழ்வில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஷ்யம்ளா தேவி, பெரம்பலூர் மாவட்ட வனத்துறை அலுவலர், பெரம்பலூர் நகர மன்ற தலைவர் அம்பிகா ராஜேந்திரன், வேப்பந்தட்டை ஊராட்சி பெருந்தலைவர் ராமலிங்கம், அரும்பாவூர் மற்றும் பூலாம்பாடி பேரூராட்சி தலைவர்கள், உழவர் உற்பத்தியாளர் குழுவினர்கள், பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

## செஞ்சி அருணாச்சலேஸ்வரர் கோவிலில் அபிதா குஜம்மாளுக்கு சிறப்பு அலங்காரம்



**செஞ்சி, அக். 26-**

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி பீரங்கி மேடு அருணாச்சலேஸ்வரர் கோவிலில் உள்ள அபிதா குஜம்பாள் அம்மனுக்கு ஒரு லட்சம் ரூபாய் மதிப் பீட்டில் ரூபாய் நோட்டுகளால் சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டன.

செஞ்சி பீரங்கி மேடு பகுதியில் உள்ள அபிதா குஜம்பாள் சமேத அருணாச்சல ஈஸ்வரர் கோவிலில் விஜயதசமி பண்டிகை முன்னிட்டு நேற்று முன்தினம் சிறப்பு வழிபாடு நடைபெற்றது. இதை முன்னிட்டு மூலவர் அருணாச்சலேஸ்வரர் அபிதகுஜம் பாள்அம்மனுக்கு சிறப்பு அபிஷேகமும் சிறப்பு தீபாராதனையும் நடைபெற்றது. தொடர்ந்து மூலவர் அபிதா குஜம்பாள் அம்மனுக்கு ஒரு லட்சம் மதிப்புள்ள 10, 20, 50, 100, 200, 500 ரூபாய் நோட்டுகளை கொண்டு சிறப்பு அலங்காரம் செய்தனர்.

தொடர்ந்து மாலை 6:00 மணிக்கு அம்மனுக்கு சிறப்புசிறப்பு பூஜைகளும், மகா தீபாரதனையும் நடந்தது. இதில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர். பக்தர்களுக்கு கோவில் நிர்வாகம் சார்பில் பிரசாதம் வினியோகிக்கப் பட்டது.

## மழைக்கால தொற்றுநோய் விழிப்புணர்வு கருத்தரங்கம்




**திண்டுக்கல், அக். 26-**

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் பட்ஸ் இந்து வித்தியாலயா மெட்ரிக்., மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற நாட்டு நலப்பணித்திட்டம் முகாமில், மாணவியருக்கான மழைக் காலங்களில் ஏற்படும் தோய் தொற்று, ரத்தசோகை குறித்த விழிப்புணர்வு மற்றும் வினாடி வினா கருத்தரங்கம் பள்ளித்தாளாளர் கண்ணம்மாள் தலைமையில் பள்ளி வளாகத்தில் நடைபெற்றது. நாட்டு நலப் பணித் திட்ட அலுவலர் பூங்கொடி முன்னிலை வகித்து பேசினார். நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக முன்னாள் அரசு மருத்துவமனை தலைமை மருத்துவர் ஏ. ஆசைத்தம்பி விழிப்புணர்வு கருத்துகளை வழங்கி சிறப்புரையாற்றினார்.

வினாடி வினா போட்டியில் வெற்றி பெற்ற மாணவியருக்கு பரிசுகள் வழங்கினார். முடிவில் நாட்டு நலப் பணித் திட்ட உதவி அலுவலர் ராஜ்குமார் நன்றி கூறினார்.

## வழிகாட்டி ஆசிரியர்களுக்கு பள்ளி புத்தாக்க மேம்பாடு ஒரு நாள் பயிற்சி!




**திருவாரூர், அக். 26-**

திருவாரூர் மாவட்ட வழிகாட்டி ஆசிரியர்களுக்கு, பள்ளி புத்தாக்க மேம்பாட்டு திட்டம் குறித்தும் அதனை 9 முதல், 12ம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு கொண்டு செல்வது பற்றியும் ஒருநாள் பயிற்சியானது மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்றது. ஆட்சியர் தி.சாருஸ்ரீ பயிற்சியை தொடங்கி வைத்தார்.

முதல்வர் கடந்தாண்டு செப்., 16ம் தேதி மதுரையில் இந்த திட்டத்தை துவங்கி வைத்தார். இந்த திட்டத்தில், அரசு பள்ளி மாணவர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டு ஒரு லட்சம் மாணவர்களில் 40 சிறந்த யோசனைகளை தேர்வு செய்து அதில் முதல் 10 சிறந்த யோசனைகளுக்கு தலா ஒரு லட்சம் பரிசு முதல்வரால் கடந்த ஜூன் 23ம் தேதி சென்னையில் வழங்கப்பட்டது. மேலும் அடுத்த 30 சிறந்த யோசனைகளுக்கு தலா 25 ஆயிரம் பரிசு தொகையை வழங்க ஏற்பாடு செய்யப்படுகிறது. இதன்படி மாணவர்களின் புத்தாக்க சிந்தனைகளை தூண்டி சாதனையாளர்களாக மாற்றவேண்டும் எனவும் மாவட்ட ஆட்சியர் தெரிவித்தார்.

இதில் தொழில்முனைவோர் மேம்பாட்டு மற்றும் புத்தாக்க நிறுவனத்தின் பயிற்சியாளர்கள் வழிகாட்டி ஆசிரியர்களுக்கு இந்த பயிற்சியை வழங்கினார்கள். மாவட்டத்தின் அனைத்து அரசு மற்றும் அரசு உதவி பெறும் மேல்நிலை பள்ளிகளிலுருந்து 91 ஆசிரியர்கள் கலந்துகொண்டு பயிற்சிபெற்றனர். பயிற்சியில் திருவாரூர் மாவட்ட முதன்மை கல்விஅலுவலர் புகழேந்தி விளக்க உரையாற்றினார். இதில் நேர்முக உதவியாளர் (மேல்நிலை )சுரேஷ்குமார், நேர்முக உதவியாளர் (இடைநிலை, ராசேந்திரன், மாவட்ட ஒருங்கிணைப்பாளர் முத்துக்குமரன் மற்றும் மார்ட்டின், அமர்நாத் உட்பட ஆசிரியர்கள், அரசு அலுவலர்கள் என கலந்துகொண்டனர்.

## மாதாந்திர உதவித் தொகை மாற்றுத்திறனாளிகள் தேர்வு முகாம்



**கள்ளக்குறிச்சி, அக். 26-**

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில், வருவாய்த்துறை சமூக பாதுகாப்பு திட்டத்தின்கீழ் 18 வயதுக்கு கீழ் உள்ள மாற்றுத் திறனாளிகளுக்கு வயது வரம்பு தளர்த்தி மாதாந்திர உதவித் தொகை வழங்க பயனாளிகள் தேர்வு முகாம் ஆட்சியர் அலுவலக வளாகத்தில் நடைபெற்றது. முகாமில் தனித் துணை ஆட்சியர் சமூக பாதுகாப்பு ராஜலட்சுமி, மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர் சுப்பிரமணி, அரசு எலும்பு முறிவு மருத்துவர் பாலசுப்பிரமணி, கண் மருத்துவர் காயத்ரி, மன நல மருத்துவர் உசா நந்தினி, காது மூக்கு தொண்டை மருத்துவர் வாசவி ஆகியோர் கலந்து கொண்டனர். முகாமில் 156 மாற்றுத்திறனாளி சிறார்கள் கலந்து தேர்வு செய்யப்பட்டனர். இந்த தேர்வு முகாமில் கலந்து கொண்டவர்களில் சக்கர நாற்காலி கோரிய இரண்டு மாற்றுத்திறனாளி சிறார்களுக்கு ரூ.18,000 மதிப்புள்ள சக்கர நாற்காலிகள் தேர்வுக்குழு சார்பாக வழங்கப்பட்டது.


**11ம் ஆண்டு நினைவஞ்சலி**



தோற்றம் : 15-05-1966

மறைவு : 26-10-2012

Miss You!

**கோ.வெங்கடேஸ்வரன்**
(திருத்தணி கருவூலம் திருவள்ளூர் மாவட்டம்)

உன்னை இழந்த நாள்! உள்ளம் உருகிய நாள்!
எண்ணம் மறைந்த நாள்! கண்ணீர் விழுந்த நாள்!
முகவரியை தொலைத்த நாள்! பெருமை மறைந்த நாள்!
– உன் அருமை தெரிந்த நாள்!

இப்படிக்கு உன் அன்பு
அன்பு சகோதரி: நிர்மலா தேவி குடும்பத்தினர்
மனைவி: சரோஜா மகன்: பிரகதீஸ்வரன்
தாய்-தந்தை: அருள்மணி கோவிந்தன்
நண்பர்: ரவிகுமார் குடும்பத்தினர் மற்றும்
உற்றார் உறவினர்கள், மணவாளநகர்



**ஜம்போ பேக் லிமிடெட்**

பதிவு அலுவலகம்: எஸ்.கே.என்கிளேவ், புதிய எண்.4, (பழைய எண்.47) நௌரோஜி சாலை, சேத்துப்பட்டு, சென்னை-600 031
CIN : L36991TN1990PLCO19944; website :www.jumbobaglimited.com;
Email: csjbl@blissgroup.com; Ph:044 26452325

30.09.2023-ல் முடிந்த ஆண்டுக்கான முழுமையான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகள் அறிக்கை

(ரூ. லட்சத்தில்)

| வ. எண். | விவரங்கள் | முடிந்த 3 மாதங்கள் 30.09.2023 | முடிந்த 3 மாதங்கள் 30.09.2022 | முடிவடைந்த 6 மாதங்கள் 30.09.2022 |
|---|---|---|---|---|
| | | (தணிக்கை செய்யாதது) | (தணிக்கை செய்யாதது) | (தணிக்கை செய்யாதது) |
| 1 | மொத்த செயல்பாடுகள் மூலம் வருமானம் | 2,751.51 | 3,245.30 | 6,359.50 |
| 2 | இக்காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (வரிக்கு முன் சாதாரண மற்றும் அசாதாரண இனங்களுக்கு முன்) | 61.26 | 51.87 | 127.62 |
| 3 | இக்காலத்திற்கான வரிக்கு முன் நிகர லாபம் / (நஷ்டம்) (சாதாரண மற்றும் அசாதாரண இனங்களுக்கு பின்) | 61.26 | 51.87 | 127.62 |
| 4 | இக்காலத்திற்கான வரிக்கு பின் நிகர லாபம் / (நஷ்டம்) (சாதாரண மற்றும் அசாதாரண இனங்களுக்கு பின்) | 45.28 | 39.63 | 96.30 |
| 5 | இக்காலத்திற்கான மொத்த விரிவான வருமானம் (இக்காலத்திற்கான வருமானம் உள்ளடக்கிய லாபம் / (நஷ்டம்) (வரிக்கு பின்) மற்றும் இதர விரிவான வருமானம் (வரிக்கு பின்) | 45.28 | 39.63 | 96.30 |
| 6 | சமபங்கு மூலதனம் (ஒவ்வொரு பங்கு ரூ.10/–) | 837.37 | 837.37 | 837.37 |
| 7 | கையிருப்புகள் (முந்தைய ஆண்டு கணக்கில் மறுமதிப்பீடு கையிருப்புகள் நீங்கலாக) | 1,320.29 | 1,175.04 | 1,175.04 |
| 8 | பங்கு ஈட்டுதொகை (அசாதாரண இனங்களுக்கு முன்) (ஒவ்வொரு பங்கு ரூ.10/–) | | | - - - |
| | அ. அடிப்படை | 0.54 | 0.47 | 1.15 |
| | ஆ. குறைமதிப்பு | 0.54 | 0.47 | 1.15 |

குறிப்பு: மேற்குறிப்பிடப்பட்டவைகள் 2015-ம் வருடத்திய SEBI (பொறுப்புகளை பட்டியலிடுதல் மற்றும் தேவைகள் வெளிப்படுத்துதல்) விதிமுறைகளில் 33-வது விதிமுறையின் கீழ், பங்கு வர்த்தக நிறுவனத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள காலாண்டு / ஆண்டிற்கான நிதிநிலை முடிவுகளின் தேர்ந்தெடுக்கப்பட்டவைகள் ஆகும். காலாண்டு/ஆண்டிற்கான நிதிநிலை முடிவுகளின் முழு படிவமும் பங்கு வர்த்தக நிறுவனத்தின் இணையதளம் URL - www.bseindia.com மற்றும் கம்பெனியின் இணையதளம் http://www.jumbobaglimited.com காணலாம்.

ஜம்போ பேக் லிமிடெட்டுக்காக
G.S.அனில்குமார்
நிர்வாக இயக்குநர்

இடம்: சென்னை
நாள்: 25.10.2023